## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

## பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு ஜூலை– 2026

## தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் மற்றும் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பித்தல்

## செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள ஜூலை–2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுகளுக்கு பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதி தோல்வியடைந்த / வருகை புரியாத தேர்வர்களிடமிருந்தும், விண்ணப்பிக்க தகுதியுள்ள தனித்தேர்வர்களிடமிருந்தும் இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்**

மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை பள்ளி மாணவர்களாக எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத மாணவர்கள், தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத அவர்கள் பயின்ற பள்ளிக்கு நேரில் சென்று **26.05.2026 (செவ்வாய்க்கிழமை) முதல் 06.06.2026 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** விண்ணப்பிக்கவேண்டும்.

**தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்**

ஜூலை–2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுள்ள தனித்தேர்வர்களும் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்களும் **26.05.2026 (செவ்வாய்க்கிழமை) முதல் 06.06.2026 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் **(Service Centres)** வாயிலாக விண்ணப்பிக்கவேண்டும். (சேவை மைய விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்) தனித்தேர்வர்கள் கட்டாயமாக தங்களது **ஆதார் அட்டை** நகல் மற்றும் கடவுச்சீட்டு அளவு புகைப்படம் (Passport Size Photo)–1 உடன் எடுத்து செல்ல வேண்டும்.

**தேர்வுக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.70/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.195/–** |

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை பள்ளியில் விண்ணப்பிக்கும் பள்ளியிலும் தேர்வர்கள் / தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

...2...

**<u>சிறப்பு அனுமதித் திட்டம் (தக்கல்)</u>**

ஜூலை-2026 பத்தாம் வகுப்பு துணைத்தேர்விற்கு **26.05.2026** முதல் **06.06.2026** வரையிலான நாட்களில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் (தக்கல்) உரிய கட்டணத் தொகையுடன் **09.06.2026 (செவ்வாய்க்கிழமை) மற்றும் 10.06.2026 (புதன்கிழமை)** ஆகிய நாட்களில் பள்ளியில் / சேவை மையத்தில் ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/- |
| 2. | தக்கல் சிறப்புக் கட்டணம் | ரூ. 500 |
| 3. | ஆன்-லைன் பதிவு கட்டணம் | ரூ. 70/- |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.695/-** |

**(அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள் 04.03.2024-ன் படி மார்ச்/ஏப்ரல் 2026-ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயின்று தேர்ச்சிப்பெறாத / வருகைப்புரியாத மாணவர்களுக்கு மட்டும் சிறப்பு அனுமதிக் கட்டணம் - ரூ.500/- விலக்களிக்கப்படுகிறது)**

**<u>அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள்</u>**

ஜூலை-2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கவுள்ள

(i) நேரடித் தனித் தேர்வர்களும் (முதன் முறையாக அனைத்துப் பாடங்களையும் தேர்வு எழுத இருப்பவர்கள்)

(ii) 2012க்கு முன்னர் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்றவர்கள்

(iii) பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் தேர்ச்சிபெறாதவர்கள் / வருகை புரியாதவர்கள்

ஆகியோர் அறிவியல் பாட செய்முறைப்பயிற்சி வகுப்பில் சேர **26.05.2026 (செவ்வாய்க்கிழமை)** முதல் **09.06.2026 (செவ்வாய்க்கிழமை)** வரையிலான நாட்களில் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்களுக்கு சென்று, கட்டணம் ரூ.125/-ஐ பணமாக செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்து ஒப்புகை சீட்டு பெற்று கொள்ள வேண்டும். இவ்வனுமதி சீட்டை காண்பித்தால் மட்டுமே அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர்.

**ஏற்கனவே அறிவியல் செய்முறைத் தேர்விற்கு பயிற்சி பெற்று, அறிவியல் செய்முறைத் தேர்வில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்கான அறிவுரைகள்**

முந்தைய பொது/துணைத் தேர்வு பருவங்களில் அறிவியல் செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்கள் வாயிலாக பதிவு செய்து, செய்முறைத் தேர்விற்கு பயிற்சி பெற்று, செய்முறைத் தேர்விற்கு வருகைபுரியாத தேர்வர்கள் பயிற்சி மேற்கொண்ட பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து ஏற்கனவே பயிற்சி பெற்றதற்கான அசல் அத்தாட்சி சான்றிதழை பெற்று அதனை சேவை மையத்தில் (NODAL CENTRE) சமர்ப்பித்து **26.05.2026 (செவ்வாய்க்கிழமை) முதல் 06.06.2026 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளும், மேற்காண் நாட்களில் விண்ணப்பிக்க தவறியவர்கள் 09.06.2026 (செவ்வாய்க்கிழமை) மற்றும் 10.06.2026 (புதன்கிழமை) சிறப்பு அனுமதித் திட்டத்தில் அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கும் விண்ணப்பித்து ஒப்புகைச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வர்கள் தங்களது ஒப்புகைச் சீட்டில் உள்ள விண்ணப்ப எண்ணை பயன்படுத்தி இத்துறையால் பின்னர் அறிவிக்கப்படும் நாட்களில் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டை பதிவிறக்கம் செய்து செய்முறைத்தேர்வில் கலந்துகொள்ள வேண்டும். தேர்வுக்கூட நுழைவு சீட்டு கொண்ட தேர்வர்கள் மட்டுமே செய்முறைத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.**

**அறிவியல் பாட கருத்தியல் தேர்வில் வெற்றி பெற்று, செய்முறைத் தேர்விற்கு வருகைபுரியாத மற்றும் செய்முறைத் தேர்வில் தோல்வியுற்ற மாணவர்களுக்கான அறிவுரைகள்**

செய்முறைத் தேர்விற்கு வருகைபுரியாத தேர்வர்கள் மற்றும் செய்முறைத்தேர்வில் தோல்வியுற்ற தேர்வர்கள் அறிவியல் பாடத்தில் கருத்தியலில் தேர்ச்சி பெற்றிருப்பின் மீண்டும் கருத்தியல் தேர்வு எழுத வேண்டாம். செய்முறைத் தேர்வு மட்டும் எழுத வேண்டும். செய்முறைத்தேர்வு ஜூலை–2026 பதிவெண் கொண்டு செய்ய ஏதுவாக சேவை மையத்திற்கு (NODAL CENTRE) சென்று அறிவியல் பாடத்தேர்விற்கும் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பித்தால் மட்டுமே தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினைப் பெற முடியும். அத்தேர்வெண்ணைக் கொண்டே செய்முறைத் தேர்வு எழுதி அப்பருவத்திற்குரிய மதிப்பெண் சான்றிதழ் பெற இயலும். இவ்வகையான தேர்வர்கள் கருத்தியலில் ஏற்கனவே தேர்ச்சி பெற்றுள்ளதால், அறிவியல் கருத்தியல் தேர்விற்கு வருகைபுரியத் தேவையில்லை.

**அறிவியல் பாடத்தை பொருத்தவரை கருத்தியல் / செய்முறை என்ற இரு பகுதிகளில் எந்த பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வி அடைந்த பகுதிக்கு மட்டும் தேர்வெழுத வேண்டும் (கருத்தியல் தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தபட்ச மதிப்பெண் 75–க்கு 20–ம், செய்முறைத் தேர்வில் 25–க்கு 15–ம் பெற வேண்டும்)**

தேர்வர்கள் செய்முறைத் தேர்வு நடத்தப்படும் நாட்கள் மற்றும் மைய விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு அறிந்து செய்முறைத் தேர்வினை தவறாமல் செய்திட வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலக விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service Centres)**

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் (Government Examinations Service Centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்கள் மற்றும் அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம்.

**தேர்வுக்கால அட்டவணை**

பத்தாம் வகுப்பு ஜூலை-2026 துணைத்தேர்விற்கான தேர்வுக்கால அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஒம்/-**
**இயக்குநர்**

**இடம்: சென்னை-6.**
**நாள் : 25.05.2026.**